ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2162/32 - 2020 පෙබරවාරි මස 13 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.13

*2162/32 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/78* (XVI) (A)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
*பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.*

கொழும்பு.

*கட்டளைச் சட்டம்*

*1.* இக்கட்டளைச் சட்டம் 2020 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகக் (திருத்தம்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2. 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1985 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய 382/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவக கட்டளைச்*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

சட்டம், அதன் 6 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"6. (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையானது, நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வருபவர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :-

(i) பணிப்பாளர் ;

(ii) உயர் கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iii) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(iv) தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரது நியமத்தர் ;

(v) களனி பல்கலைக்கழகத்தின் பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி ; அத்துடன்

(vi) களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தகம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி ; அத்துடன்

(ஆ) கல்விசார், உயர் தொழில்சார், அறிவியல்சார் அல்லது நிருவாகம்சார் துறைகளில் திறமை வாய்ந்த சேவையை அளித்துள்ள ஆட்களிலிருந்து (இதனகத்துக்குப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஏழு (07) உறுப்பினர்கள்.".

*02-578*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.